<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)
*******

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,

**PALLAVARAM.**

| | |
|---|---|
| DVC. No. | 09/2023 |
| Prosecution: | ம.சா.1 |

| | | |
|---|---|---|
| **Deposition of witness for Name** | ~ | ஜெகஸ்ரீ |
| **Husban Name** | ~ | கார்த்திக் |
| **Village** | ~ | |
| **Taluk** | ~ | |
| **Caste** | ~ | |
| **Calling** | ~ | |
| **Religion** | ~ | |
| **Age** | ~ | |

<u>Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 on the day **of Dt. 06.08.2025.**</u>

**<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை (In Camera)</u>**

சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். தற்போது எந்த விலாசத்தில் வசித்து வருகிறீர் என்றால் ஷோபா மெரிண்டா அபார்ட்மெண்ட், கேளம்பாக்கத்தில் வசித்து வருகிறேன். மேற்படி விலாசத்தில் வசித்து வருவதற்கான ஆவணம் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். 1வது எதிர்மனுதாரர் கார்த்திக் என் கணவர் என்றால் சரிதான். இவ்வழக்கில் 1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையை படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். நான் மனுவில் குறிப்பிட்டுள்ள 2 விலாசத்திலும் நான் குடியிருக்கவில்லை என 1ம் எதிர்மனுதாரர் எதிருரையில் மறுத்துள்ளதை ஆட்சேபித்து நிரூபண வாக்குமூலத்தில் ஆட்சேபணை தெரிவித்துள்ளீரா என்றால் இல்லை. ஆனால் மேற்படி விலாசத்தில் தான் வசித்து வருகிறேன். அந்த விலாசத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் வந்துள்ளார்.

மேற்படி விலாசத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் வந்தது குறித்து ஆவணம் ஏதும் தாக்கல் செய்துள்ளீரா என்றால் 1ம் எதிர்மனுதாரர் மேற்படி விலாசத்திற்கு வந்ததாக ஒப்புக்கொண்டு பதில் குறிப்பிட்டுள்ளார். 1ம் எதிர்மனுதாரர் மேற்படி ஷோபா மெரிட்டா குடியிருப்பு வளாகத்தில் வந்து நான் அந்த அடுக்குமாடி குடியிருப்பில் வசித்து வருகிறாரா என விசாரித்த போது நான் அங்கு வசித்து வரவில்லை என பாதுகாப்பு அலுவலர் தெரிவித்ததால் 1ம் எதிர்மனுதாரர் நான் எங்கு வசித்து வருகிறேன் என கண்டுபிடிக்க முடியவில்லை என எதிர்வழக்குரையில் தெரிவித்துள்ளார் என்றால் சரியல்ல. நான் அந்த அடுக்குமாடி குடியிருப்பில் தான் வசித்து வருகிறேன். மேற்படி அடுக்குமாடி குடியிருப்பு எனக்கு சொந்தமானதா என்றால் இல்லை. வாடகைக்கு வசித்து வருகிறேன்.

மேற்படி நான் வசித்து வரும் அடுக்குமாடி குடியிருப்பு யார் பெயரில் வாடகைக்கு விடப்பட்டுள்ளது என்றால் எனது பெயரில் வாடகைக்கு விடப்பட்டுள்ளது. ஜெகதீஷ் என்பவர் எனது அண்ணன் ஆவார். மேற்படி அடுக்குமாடி குடியிருப்பில் என்னுடன் யார் யார் வசித்து வருகிறார்கள் என்றால் நானும் எனது தாயார் மற்றும் என் குழந்தை ஆகியோர் வசித்து வருகிறோம். என் அண்ணன் என் வீட்டில் வசித்து வரவில்லை. எனது அண்ணனுக்கு திருமணம் நடைபெற்று விட்டது. எனது அண்ணனும் அவர் மனைவியும் ஷோபா மெரிட்டா அடுக்குமாடி குடியிருப்பில் தான் வசித்து வருகிறார்கள். எனது அண்ணன் அவரது மனைவியின் நகைகள் மற்றும் இதர நபர்களிடம் கடன் பெற்று மோசடி செய்ததால் எனது அண்ணனை அவர் மனைவி விட்டு சென்று விட்டார் என்றால் சரியல்ல. எனது அண்ணனின் மனைவி என் அண்ணனை ஏமாற்றி முன் திருமணத்தை மறைத்து திருமணம் செய்து கொண்டதால் அவர்களுக்கு இடையே பிரச்சனை ஏற்பட்டு பிரிந்து சென்று விட்டார்கள்.

என் மீதும் எனது அண்ணன் மற்றும் என் தாயார் மீது என் அண்ணி காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு அதில் நான் பிணையில் இருந்து வருகிறேன் என்றால் அது எனது அண்ணன் மனைவி தகப்பனார் போலிசாக உள்ளதால் பொய்யாக பதிவு செய்யப்பட்டது ஆகும். அதில் நான் முன்பிணையில் இருந்து வருகிறேன். எனக்கும் எனது கணவருக்கும் பிரச்சனை ஏற்பட என் அண்ணன் தான் காரணம் என எதிருரையில் குறிப்பிட்டுள்ளதை நான்

நிரூபண வாக்குமூலத்தில் மறுக்கவில்லை என்றால் சரியல்ல. என்ன படித்துள்ளீர் என்றால் நான் MCA படித்துள்ளேன். எனக்கு திருமணம் நடைபெறும்போது நான் TCS சிறுசேரியில் வேலை பார்த்து வந்தேன். எனது சொந்த ஊர் பாண்டிச்சேரி ஆகும். நான் மனுவில் குறிப்பிட்டுள்ள புதுச்சேரி ரெயின்போ நகர் விலாசமானது எனது பூர்வீக விலாசம் என்றால் சரிதான். மேற்படி புதுச்சேரியில் உள்ள வீடானது தற்போது எங்களுக்கு சொந்தமானது இல்லை என்றால் சரிதான். அதனை வங்கி ஏலம் விட,டுள்ளது என்றால் இல்லை. நாங்கள் விற்பனை செய்து விட்டோம்.

மேற்படி வீடானது எனது தகப்பனாருடன் சேர்ந்து எனது அண்ணன் வங்கியில் அடமானம் வைத்து கடன் பெற்று பின்பு அந்த கடனை செலுத்த முடியாமல் ஏலத்தில் விடப்பட்டது என்றால் இல்லை. நாங்கள் தான் விற்பனை செய்தோம். தற்போது எங்கு வேலை பார்த்து வருகிறேன் என்றால் பேங்க் ஆப் அமெரிக்கா என்ற நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறேன். தற்போது எனக்கு எவ்வளவு சம்பளம் என்றால் 1,50,000 சம்பளம் ஆகும். இந்தியாவில் வரதட்சணை கேட்பதும் கொடுப்பதும் குற்றம் என்றால் சரிதான். நான் மனுவில் குறிப்பிட்டுள்ள 50 சவரன் தங்க நகை வாங்கியது தொடர்பாக ரசீதுகளை வைத்துள்ளேனா என்றால் இல்லை. அந்த ரசீதுகளை சேர்த்து நகையுடன் 1ம் எதிர்மனுதாரரிடம் கொடுத்து விட்டேன்.

நான் எப்போது கருத்தரித்திருந்தது தெரிய வந்தது என்றால் ஜனவரி 2017 அன்று தெரிய வந்தது. எதிர்மனுதாரர் எதிருரையில் எதிர்மனுதாரருக்கு தெரியாமல் எனது அண்ணனுக்கு கடன் பெற்று கொடுத்தது தெரிய வந்ததாக குறிப்பிட்டுள்ளதை எனது நிரூபண வாக்குமூலத்தில் மறுத்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கு வளைகாப்பு நடத்த முயன்ற போது என் நகைகளை 1ம் எதிர்மனுதாரர் கேட்டபோது அதனை வங்கி லாக்கரில் வைத்து அதன் சாவியை எனது அலுவலகத்தில் வைத்து விட்டதாகவும் அதன் பின்னிட்டு அந்த சாவியை என் உடன் வேலை செய்யும் நபர் எடுத்து சென்று விட்டதாக சொன்னதால் 1ம் எதிர்மனுதாரர் வீட்டின் லாக்கரை உடைக்க சென்ற போது அந்த நகைகளை என் அண்ணனிடம் கொடுத்ததாக சொன்னதை எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு மறுக்கவில்லை என்றால் சரிதான். ஆனால் மேற்படி நிகழ்வு பொய்யானது. மேற்படி நிகழ்வானது உண்மையானது என்பதால் நான் அதனை எனது நிரூபண வாக்குமூலத்தில் மறுக்கவில்லை என்றால் சரியல்ல.

எனக்கும் 1ம் எதிர்மனுதாரருக்கும் ஏற்பட்ட திருமணம் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டது என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் என்ன படித்துள்ளார் என்றால் பி.டெக் படித்துள்ளார். திருமணத்தின் போது 1ம் எதிர்மனுதாரர் எங்கு வேலை பார்த்து வந்தார் என்றால் HCL நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தார். 1ம் எதிர்மனுதாரர் குறிப்பிட்டுள்ள எண்.EF2, சேப்ரான் லைட்ஸ், பல்லவா கார்டன் ஜமீன் பல்லாவரம் என்ற விலாசத்தில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பானது 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானது என்றால் சரிதான். ஆனால் அந்த வீட்டை அவர் 5 லட்சம் செலுத்தில் மீத தொகையை தவணை தொகை செலுத்தி வந்தார். 1ம் எதிர்மனுதாரர் எனது வருமானத்தில் இருந்துதான் மேற்படி வீட்டிற்கு தவணை தொகை செலுத்தி வந்தார். ரூ.30,00,000 த்திற்கு எனது வருமானத்தில் இருந்து மேற்படி வீட்டிற்கு தவணை தொகை செலுத்தி உள்ளார்.

திருமணம் நடைபெற்று எவ்வளவு வருடத்திற்குள் வெளிநாடு சென்றேன் என்றால் 2 1/2 ஆண்டுகள் கழித்து 2014ம் ஆண்டு வெளிநாடு சென்றேன். எத்தனை வருடம் வெளிநாட்டில் வசித்தேன் என்றால் 26.10.2014 முதல் 31.01.2016 வரை இருந்து வந்தேன். 1ம் எதிர்மனுதாரர் ஏதேனும் வெளிநாடு சென்று வந்துள்ளாரா என்றால் 1 மாதம் வெளிநாடு சென்றுள்ளார். திருமணம் நடைபெற்றதில் இருந்து 1ம் எதிர்மனுதாரருடன் உடலுறவு கொண்டுள்ளீரா என்றால் இல்லை. 1ம் எதிர்மனுதாரர் வீட்டிற்கு சென்றாலும் இருவரும் தனித்தனியாகத்தான் ஹாலில் படுத்துக்கொள்வோம். திருமணத்திற்கு பின்பு சிலகாலம் 1ம் எதிர்மனுதாரர் என்னுடன் உடலுறவு கொண்டுள்ளார் என்றாலும் அதன் பின்னிட்டு எனது அண்ணன் எனது வாழ்க்கையில் வந்ததால் நான் 1ம் எதிர்மனுதாரருடன் உடலுறவு கொள்வதற்கு மறுத்து வந்தேன் என்றால் சரியல்ல.

பொதுவாக ஒரு தம்பதியினருக்கு இடையே பாலியல் தொடர்பாக பிரச்சனை ஏற்படும் பட்சத்தில் மருத்துவரை அணுகி ஆலோசனை பெறுவது வழக்கம் என்றால் சரிதான். இவ்வழக்கில் 1ம் எதிர்மனுதாரருக்கு பாலியல் சம்பந்தமாக குறைபாடு உள்ளது குறித்து மருத்துவமனைக்கு ஆலோசனைக்காக சென்றுள்ளீரா என்றால் கீழ்க்கட்டளையில் உள்ள மேக்சிமஸ் மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு பரிசோதனை செய்து எனது கணவருக்கு பாலியல் குறைபாடு உள்ளதாக தெரிவித்து

பின்னிட்டு மருந்துகள் எடுத்துக்கொண்டு வந்தார். மேற்படி விபரத்தை நான் தாக்கல் செய்த மனுவிலும் நிரூபண வாக்குமூலத்திலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றாலும் மேற்படி நிகழ்வு நடைபெறாததால் அதை குறிப்பிடவில்லை என்றாலும் 1ம் எதிர்மனுதாரர் தற்போது எந்தவித பாலியல் குறைபாடும் இன்றி இருந்து வருகிறார் என்றால் சரியல்ல.

நான் 2016ம் ஆண்டு ஊசி மூலம் கருவுற்றதாக குறிப்பிடட நிலையில் எந்த மருத்துவமனையில் மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் நான் மருத்துவமனை செல்லவில்லை. வீட்டிலேயே சுயமாக ஊசி மூலம் எனது கணவரின் விந்தணுவை என்னுள் செலுத்தி கருவுற்றேன். எவ்வித மருத்துவர் உதவி மற்றும் மருத்துவ ஆலோசனை இல்லாமல் மருத்துவரின் உதவு இல்லாமல் சுயமாக ஆண்மை இழந்த மற்றும் எழுச்சியற்ற ஆணுறுப்பு கொண்ட ஆணிடம் இருந்து மருத்துவ உபகரணம் இல்லாமல் விந்தணுவை பெற முடியாது என்றாலும் அவ்வாறு விந்தணுவை மருத்துவ உபகரணங்கள் இன்றி சுயமான ஒரு பெண்ணின் கருப்பையில் செலுத்த முடியாது என்றால் சரியல்ல. நான் ஊசி மூலம் எனது கர்ப்பப்பையில் எனது கணவரின் விந்தணுவை செலுத்தி கொண்டதால் கருவுற்றேன்.

விறைப்பு தன்மை அற்ற ஆணிற்கு விந்தணு உற்பத்தி ஆகாது என்றாலும் விந்தணு உற்பத்தி ஆகும் ஆணிற்கு விறைப்பு தன்மை இருக்கும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கும் 1ம் எதிர்மனுதாரருக்கும் இயற்கையான முறையில் உடலுறவு கொண்டு குழந்தை பிறந்தது என்றால் இல்லை. செயற்கை முறையில் ஊசி மூலம் நான் விந்தணு செலுத்தி கொண்டதால் குழந்தை பிறந்தது. இவ்வழக்கு தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பாக 1ம் எதிர்மனுதாரர் விவாகரத்து கோரி 2021ம் ஆண்டு என் மீது வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். ஒரு தம்பதியினருக்கு இடையே பாலியல் குறைபாடு இருந்தார் அத்தரப்பினர்கள் மேற்கொண்டு குடும்ப வாழ்க்கை நடத்த மாட்டார்கள் என்றாலும் அதே போன்று இவ்வழக்கில் 1ம் எதிர்மனுதாரர் ஆண்மை அற்றவர் என உண்மையாக உறுதி செய்து இருந்தார் நான் 1ம் எதிர்மனுதாரருக்கு விவாகரத்து வழங்க எவ்வித ஆட்சேபணையும் தெரிவித்திருக்க மாட்டார் என்றாலும் அதனால் 1ம் எதிர்மனுதாரர் ஆண்மையற்றவர் என்றால் சரியல்ல.

1ம் எதிர்மனுதாரர் மருத்துவரிடம் பரிசோதித்து 1ம் எதிர்மனுதாரர் ஆண்மை தன்மையுடன் உள்ளவர் என் நிரூபணம் செய்யும் பட்சத்தில் நான் தாக்கல் செய்த வழக்கை திரும்ப பெற்று கொண்டு 1ம் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ தயாராக உள்ளீரா என்றால் இல்லை.

**எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் முறையீட்டிற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

S/d C.P.Mullaivanan
District Munsif-cum
Judicial Magistrate,
Pallavaram.